சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **247 / 2021**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.3**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 09.10.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | குழந்தைவேல் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். என்னுடைய ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.9, என்னுடைய ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.10 (ம.சா.ஆ.9, 10 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அரசு பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்து, கடந்த 2018ம் ஆண்டில் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஓய்வூதியமாக ரூ.15,000/- பெற்றுவருகிறேன். அரசு வேலையில் ஓய்வு பெற்றதற்கு பின்னர் தனியாக பணி செய்யவேண்டும் என்றால் அனுமதி பெறவேண்டுமா என்றால் அவசியம் இல்லை. நான் மனுதாரரிடம் ஓட்டுநராக வேலை பார்த்த வகையில் மாதமொன்றுக்கு ரூ.10,000/- சம்பளம் பெற்றேன். ஒரு நபர் மாதமொன்றுக்கு ரூ.25,000/-க்கு மேல் சம்பாதித்தால் வருமான வரி செலுத்தவேண்டும் என்றால் சரிதான். நான் தற்பொழுது வருமான வரி கணக்கு செலுத்துவதில்லை. பணியில் இருந்தபோது செலுத்தினேன். மேற்படி மனுதாரர் என்னை வெளியூருக்கு செல்லும்போது மட்டும் தான் ஓட்டுநராக அழைத்து செல்வார் என்றால் இல்லை, உள்ளூரில் செல்வதற்கு அழைத்து செல்வார். மேற்படி மனுதாரர் எனக்கு சம்பளத்தை வங்கி கணக்கில் செலுத்துவாரா, இல்லை ரொக்கமாக செலுத்துவாரா என்கின்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரரிடம் பணிபுரிந்தற்காக அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை. அரசு பணி ஓய்வுக்கு பின்னர் தனியாக பணி செய்வதற்கு அனுமதி தேவையில்லை என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்வதற்கு நான் பணிபுரிந்த நிறுவனத்தை சாட்சியாக விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. நான் மனுதாரரிடம் ஓட்டுநராக

வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்தற்காக என்பதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-( ஈ.முத்துசாமி)

சார்பு நீதிபதி

குளித்தலை.